www.Padasalai.Net www.CBSEtips.in

# செலக்சன்

## 6

## சமூக அறிவியல்

அன்பு நிலையம்

மதுரை – 625001

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# செலக்சன் 6

## ஆறாம் வகுப்பு

## சமூக அறிவியல்

முதல் பருவம் + இரண்டாம் பருவம் + மூன்றாம் பருவம்

மூன்று பருவங்களும் இணைந்தது

✆ 94430 43338
✆ 94430 46662

வெளியிடுபவர்
**அன்பு நிலையம்**
129, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001.

விலை ₹ 100

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பொருளடக்கம்


| வ.எண் | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| | முதல் பருவம் | |
| | வரலாறு | |
| 1. | வரலாறு என்றால் என்ன ? | 3 |
| 2. | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | 10 |
| 3. | சிந்துவெளி நாகரிகம் | 15 |
| 4. | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | 25 |
| | புவியியல் | |
| 1. | பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம் | 32 |
| 2. | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | 38 |
| | குடிமையியல் | |
| 1. | பன்முகத் தன்மையினை அறிவோம் | 47 |
| 2. | சமத்துவம் பெறுதல் | 51 |
| | இரண்டாம் பருவம் | |
| | வரலாறு | |
| 1. | வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 56 |
| 2. | மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 63 |
| 3. | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 73 |
| | புவியியல் | |
| 1. | வளங்கள் | 82 |
| | குடிமையியல் | |
| 1. | தேசியச் சின்னங்கள் | 91 |
| 2. | இந்திய அரசமைப்புச் சட்டம் | 96 |
| | பொருளியல் | |
| 1. | பொருளியல் – ஓர் அறிமுகம் | 99 |
| | மூன்றாம் பருவம் | |
| | வரலாறு | |
| 1. | பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும் : சங்ககாலம் | 104 |
| 2. | இந்தியா – மௌரியருக்குப் பின்னர் | 111 |
| 3. | பேரரசுகளின் காலம் : குப்தர், வர்த்தனர் | 118 |
| 4. | தென்னிந்திய அரசுகள் | 125 |
| | புவியியல் | |
| 1. | ஆசியா மற்றும் ஐரோப்பா | 131 |
| 2. | புவி மாதிரி | 142 |
| 3. | பேரிடரைப் புரிந்து கொள்ளுதல் | 150 |
| | குடிமையியல் | |
| 1. | மக்களாட்சி | 152 |
| 2. | உள்ளாட்சி அமைப்பு– ஊரகமும் நகர்ப்புறமும் | 154 |
| 3. | சாலை பாதுகாப்பு | 158 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செலக்சன்

# ⑥ சமூக அறிவியல்

# முதல் பருவம்

## வரலாறு

## அலகு 1. வரலாறு என்றால் என்ன ?

### பயிற்சிகள்

**I. சரியான விடையைக் கண்டுபிடி**

**1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை.**

அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்

**விடை : ஆ) வேட்டையாடுதல்**

---

**II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டுக.**

**1. கூற்று :** பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும் போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.

**காரணம் :** குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்த போது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு

**விடை : ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி**

---

**2. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருள்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது ?**

அ) அருங்காட்சியகங்கள் ஆ) புதைபொருள்படிமங்கள்
இ) கற்கருவிகள் ஈ) எலும்புகள்

**விடை : அ) அருங்காட்சியகங்கள்**

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் எவை ?**

**விடை:** **<u>வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் :</u>**

★ கற்கருவிகள் ★ பாறை ஓவியங்கள்
★ புதை படிவங்கள் ★ அகழாய்வுப் பொருட்கள்

**4. வரலாற்றுக்கு முந்தைய காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை ?**

**விடை:** பிம்பேட்கா, பிரம்மகிரி, ஹன்சாகி பள்ளத்தாக்கு, அத்திரம்பாக்கம், ஆதிச்சநல்லூர்.

**5. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை ?**

**விடை:** ★ பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்களை பாதுகாக்கும் இடமாக அருங்காட்சியகம் பயன்படுகிறது.

★ அதனைப் பார்ப்பதன் மூலம் நம்முடைய முன்னோர்கள் வாழ்ந்த காலத்தையும் அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

**6. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றைக் கூறு.**

**விடை:**

★ கரடுமுரடான கற்கருவிகள். ★ வலுவான மரக்கிளைகள்.
★ கூர்மையான எலும்புகள். ★ விலங்குகளின் கொம்புகள்.

**7. பாறைகளில் ஓவியங்கள் ஏன் வரையப்பட்டன ?**

**விடை:** ★ வேட்டைக்குப் போனவர்கள் அங்கு நடந்தது என்ன என்பதை, தங்களோடு வேட்டைக்கு வர இயலாதவர்களுக்குக் காட்டுவதற்காக பாறைகளில் ஓவியங்களை வரைந்தனர்.

★ சில நேரங்களில் பொழுது போக்காக வரைந்தனர்.

**8. தொல் கைவினைப் பொருள்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.**

**விடை:** 1) பானைகள் 2) பொம்மைகள்

## VIII. உயர் சிந்தனை வினாக்கள்.

**1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது ?**

**விடை:** ★ பழங்கால மனிதர்கள் வாழ்ந்து வந்த குகைகளுக்குள் கொடிய விலங்குகள் நுழைந்து விடும்.

★ ஆனால் நாய்கள் தமது கூரிய மோப்ப உணர்வினால் விலங்குகளின் வருகையை அறிந்து கொண்டு குரைத்தன.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



**XII. வரைபடம்.**

**இந்திய அரசியல் நில வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

1. டெல்லி, 2. சென்னை, 3. தமிழ்நாடு,
4. ஆந்திர பிரதேசம், 5. கேரளா, 6. கர்நாடகா




**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. அசோகர் குறித்த வரலாற்று ஆவணங்களை நூலாக வெளியிட்டவர்............. **விடை : சார்லஸ் ஆலன்**

2. தம்மா என்னும் பிராகிருத சொல்லின் பொருள் .............
**விடை : அறநெறி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# அலகு 3. சிந்துவெளி நாகரிகம்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

**1. சிந்துவெளி மக்கள் எந்த உலோகங்களைப் பற்றி அறிந்திருந்தனர்?**

1) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்
2) செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம்
3) செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி
4) செம்பு, வெள்ளி, இரும்பு, தங்கம்

**விடை : 1) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்**

**2. சிந்து வெளி நாகரிகம் எக்காலத்தைச் சார்ந்தது.**

1) பழைய கற்காலம் 2) இடைக்கற்காலம்
3) புதிய கற்காலம் 4) உலோக காலம்

**விடை : 4) உலோக காலம்**

**3. ஆற்றங்கரைகள் 'நாகரிகத்தொட்டில்கள்' என அழைக்கப்படக் காரணம்.**

1) மண் மிகவும் வளமானதால்
2) சீரான கால நிலை நிலவுவதால்
3) போக்குவரத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதால்
4) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்

**விடை : 4) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்**

---

**II. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் எனலாம்.**
**காரணம் : திட்டமிடப்பட்ட நகர அமைப்பு, மேம்பட்ட கழிவு நீர் அமைப்பு**

1) கூற்றும் காரணமும் சரி 2) கூற்று தவறு, காரணம் சரி
3) கூற்று சரி, காரணம் தவறு 4) கூற்றும் காரணமும் தவறு

**விடை : 1) கூற்றும் காரணமும் சரி**

**2. கூற்று : ஹரப்பா நாகரிகம் வெண்கல காலத்தைச் சார்ந்தது.**
**காரணம் : ஹரப்பா மக்களுக்கு இரும்பின் பயன் தெரியாது**

1) கூற்றும் காரணமும் சரி
2) கூற்று தவறானது, காரணம் சரி
3) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது
4) கூற்று மற்றும் காரணம் தவறானவை

**விடை : 1) கூற்றும் காரணமும் சரி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## புவியியல்

## அலகு 1. பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம்

### பயிற்சிகள்

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பேரண்டம் உருவாகக் காரணமான நிகழ்வு .................
**விடை : பெருவெடிப்பு**

2. இரு வான்பொருள்களுக்கு இடையிலான தொலைவை அளக்க உதவும் அளவு ................ ஆகும். **விடை :ஒளியாண்டு**

3. சூரியக் குடும்பத்தின் மையம்....................... **விடை : சூரியன்**

4. கோள் என்ற வார்த்தையின் பொருள் ....................
**விடை :சுற்றி வருபவர்**

5. அதிக துணைக்கோள்களைக் கொண்ட கோள்................
**விடை :வியாழன்**

6. நிலவிற்கு அனுப்பப்பட்ட முதல் இந்திய விண்கலம் ................
**விடை : சந்திராயன்–1**

7. புவியின் சாய்வுக் கோணம் ................... **விடை : 23½°**

8. நிலநடுக்கோடு சூரியனை நேராகச் சந்திக்கும் நாள்கள் ............ மற்றும் ..................... **விடை : மார்ச் 21, செப்டம்பர் 23**

9. சூரிய அண்மை நிகழ்வின் போது புவி சூரியனுக்கு ...................... ல் காணப்படும். **விடை : மிக அருகில்**

10. புவியின் மேற்பரப்பின் மீது ஒளிபடும் பகுதியையும், ஒளிபடாத பகுதியையும் பிரிக்கும் கோட்டிற்கு ................ என்று பெயர்.
**விடை :ஒளிர்வு வட்டம்**

---

**ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. **புவி தன் அச்சில் சுழல்வதை இவ்வாறு அழைக்கிறோம்.**
அ) சுற்றுதல் ஆ) பருவகாலங்கள்
இ) சுழல்தல் ஈ) ஒட்டம் **விடை : இ) சுழல்தல்**

2. **மகரரேகையில் சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழும் நாள்**
அ) மார்ச் 21 ஆ) ஜூன் 21
இ) செப்டம்பர் 23 ஈ) டிசம்பர் 22 **விடை :ஈ) டிசம்பர் 22**

3. **சூரியக்குடும்பம் அடங்கியுள்ள விண்மீன் திரள் மண்டலம்**
அ) ஆண்டிரோமெடா
ஆ) மெகலனிக்கிளவுட் (Magellanic Clouds)
இ) பால்வெளி
ஈ) ஸ்டார்பர்ஸ்ட் **விடை :இ) பால்வெளி**

4. **மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்பொருள்**
அ) செவ்வாய் ஆ) சந்திரன்
இ) புதன் ஈ) வெள்ளி **விடை : ஆ) சந்திரன்**

5. **எந்த கோளால் தண்ணீரில் மிதக்க இயலும் ?**
அ) வியாழன் ஆ) சனி
இ) யுரேனஸ் ஈ) நெப்டியூன் **விடை :ஆ) சனி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஆ) புவி சுற்றுவதால் ஏற்படும் மாற்றங்கள் :**

★ புவி தன் நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றிவரும் நகர்வையே சுற்றுதல் என்று கூறுகிறோம்.

★ புவி தன் அச்சில் சாய்ந்து சூரியனைச் சுற்றி வருவதால் பருவகாலங்கள் தோன்றுகின்றன.

**3. புவிக்கோளங்களின் தன்மைகள் பற்றி விவரி.**

**விடை :** உயிரினங்கள் வாழத் தகுதியான கோள் புவியாகும்.

★ புவியில் காணப்படும் மூன்று தொகுதிகள் பாறைக்கோளம், நீர்க்கோளம், வளிமண்டலம் ஆகும்.

**அ) பாறைக்கோளம் :** புவியின் மேற்பரப்பில் காணப்படும் பாறைகள் மற்றும் மண் அடுக்குகளாகும்.

★ இந்த நிலப்பரப்பில் உயிரினங்கள் காணப்படுகின்றன.

**ஆ) நீர்க்கோளம் :** பெருங்கடல்கள், கடல்கள், ஆறுகள், ஏரிகள், மலையுச்சிகளில் காணப்படும் பனிகவிகைகள், வளிமண்டலத்தில் காணப்படும் நீராவி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.

**இ) வளிமண்டலம் :** புவியைச் சுற்றிக் காணப்படும் பல்வேறு காற்றுத் தொகுதி ஆகும்.

★ இங்கு காணப்படும் வாயுக்களில் நைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் முதன்மையான வாயுக்களாகும்.

**ஈ) உயிர்க்கோளம் :** பாறைக்கோளம், நீர்க்கோளம் மற்றும் வளிமண்டலம் ஆகியவற்றோடு தொடர்புடைய உயிரினங்கள் வாழக்கூடிய ஒரு பகுதி ஆகும்.


**ஒ) அ. கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து விடையளிக்கவும்.**




1. சூரியனுக்கு அருகாமையில் உள்ள கோள் எது ? **விடை : புதன்**
2. பெரியதான கோள் எது ? **விடை : வியாழன்**
3. சூரியனிடமிருந்து தொலைவில் உள்ள கோள் எது ? **விடை : நெப்டியூன்**
4. இரண்டாவது சிறிய கோள் எது ? **விடை : செவ்வாய்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**4. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பெருங்கடல்கள், கடல்கள் மற்றும் நீர்ச்சந்திகள் ஆகியவற்றைக் குறிக்கவும்.**




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# குடிமையியல்

## அலகு 1. பன்முகத்தன்மையினை அறிவோம்

### பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. இந்தியாவில் ....................மாநிலங்களும், ..................யூனியன் பிரதேசங்களும் உள்ளன**

அ) 27,9 ஆ) 28,9
இ) 28,7 ஈ) 29,9 **விடை : ஆ) 28, 9**

**2. இந்தியா ஒரு ....................என்று அழைக்கப்படுகிறது**

அ) கண்டம் ஆ) துணைக்கண்டம்
இ) தீவு ஈ) இவற்றில் எதுவுமில்லை
**விடை : ஆ) துணைக்கண்டம்**

**3. மிக அதிக மழைப்பொழிவுள்ள மௌசின்ராம் .................. மாநிலத்தில் உள்ளது.**

அ) மணிப்பூர் ஆ) சிக்கிம்
இ) நாகலாந்து ஈ) மேகாலயா **விடை : ஈ) மேகாலயா**

**4. கீழ்க்கண்டவற்றில் எந்த மதம் இந்தியாவில் நடைமுறையில் இல்லை ?**

அ) சீக்கிய மதம் ஆ) இஸ்லாமிய மதம்
இ) ஜொராஸ்ட்ரிய மதம் ஈ) கன்ஃபூசிய மதம்
**விடை : ஈ) கன்ஃபூசிய மதம்**

**5. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அலுவலக மொழிகளின் எண்ணிக்கை**

அ) 25 ஆ) 23
இ) 22 ஈ) 26 **விடை : இ) 22**

**6. ....................மாநிலத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.**

அ) கேரளா ஆ) தமிழ்நாடு
இ) பஞ்சாப் ஈ) கர்நாடகா **விடை : அ) கேரளா**

**7. மோகினியாட்டம் ....................மாநிலத்தின் செவ்வியல் நடனம் ஆகும்.**

அ) கேரளா ஆ) தமிழ்நாடு
இ) மணிப்பூர் ஈ) கர்நாடகா **விடை : அ) கேரளா**

**8. "டிஸ்கவரி ஆஃப் இந்தியா" என்ற நூலினை எழுதியவர் .........**

அ) இராஜாஜி ஆ) வ.உ.சி
இ) நேதாஜி ஈ) ஜவகர்லால் நேரு
**விடை : ஈ) ஜவகர்லால் நேரு**

**9. "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற சொற்றொடரை உருவாக்கியவர் ..............**

அ) ஜவகர்லால் நேரு ஆ) மகாத்மா காந்தி
இ) அம்பேத்கார் ஈ) இராஜாஜி
**விடை : அ) ஜவகர்லால் நேரு**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| கர்நாடகா | – | தசரா |
| கேரளா | – | ஓணம் |
| மத்திய பிரதேசம் | – | லோக்கர் திருவிழா |
| மணிப்பூர் | – | யோசாங் |
| மேகாலயா | – | கஹசிஸ் |
| மிசோரம் | – | ஷாப்சார்கட் |
| நாகலாந்து | – | செக் ரொன்னி |
| ஒடிசா | – | டோளா யாத்ரா |
| பஞ்சாப் | – | பண்டிசோர் திவாஸ் |
| ராஜஸ்தான் | – | காங்கூர் |
| சிக்கிம் | – | லோசர் |
| தமிழ்நாடு | – | பொங்கல் |
| திரிப்பூரா | – | கர்ஜீ பூஜை |
| உத்திரப்பிரதேசம் | – | ராம் நவமி |
| உத்திரகாண்ட் | – | பூர்ண கும்பமேளா |
| மேற்கு வங்காளம் | – | துர்கா பூஜை |

**VIII. மாணவர் செயல்பாடு.**

## அலகு 2. சமத்துவம் பெறுதல்

### பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. பின்வருவனவற்றில் எது பாரபட்சத்திற்கான காரணம் அல்ல**

அ) சமூகமயமாக்கல் ஆ) பொருளாதார நன்மைகள்
இ) அதிகாரத்துவ ஆளுமை ஈ) புவியியல்

**விடை : ஈ) புவியியல்**

**2. பாலின அடிப்படையில் நடத்தப்படும் பாகுபாடு குறிப்பிடுவது**

அ) பாலின பாகுபாடு ஆ) சாதி பாகுபாடு
இ) மத பாகுபாடு ஈ) சமத்துவமின்மை

**விடை : அ) பாலின பாகுபாடு**

**3. பாலின அடிப்படையிலான ஒத்தக்கருத்து உருவாதல் பெரும்பாலும் சித்தரிக்கப்படுவது**

அ) திரைப்படங்கள் ஆ) விளம்பரங்கள்
இ) தொலைக்காட்சி தொடர்கள் ஈ) இவை அனைத்தும்

**விடை : ஈ) இவை அனைத்தும்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**IV. பின்வரும் வினாக்களுக்குவிடையளி.**

**1. பாரபட்சம் என்றால் என்ன ?**

**விடை :** ★ பாரபட்சம் என்பது மற்றவர்களைப் பற்றி எதிர்மறையான அல்லது தாழ்வான முறையில் கருதுவதாகும்.

**2. ஒத்தக் கருத்து என்றால் என்ன ?**

**விடை :** ★ ஒத்தக்கருத்து என்பது தவறான கண்ணோட்டம் அல்லது ஏதோ ஒன்றைப் பற்றிய தவறான கருத்தாகும்.

**3. பாகுபாடு என்றால் என்ன ?**

**விடை :** ★ மக்களுக்கெதிரான எதிர்மறையான செயல்களே பாகுபாடு எனப்படும்.

**4. இந்திய அரசியலமைப்பின்படி எந்த பிரிவுகள் சமத்துவத்தைப் பற்றிக் கூறுகிறது ?**

**விடை :** ★ இந்திய அரசியலமைப்பின்படி 14– வது பிரிவு சமத்துவத்தைப் பற்றிக் கூறுகிறது.

**V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி.**

**1. பாரபட்சத்திற்கான காரணங்களைக் கூறுக.**

**விடை : <u>பாரபட்சம் உருவாவதற்கு பொதுவான சமூகக் காரணிகள்</u> :**

1. சமூகமயமாக்கல்
2. நிர்ணயிக்கப்பட்ட நடத்தை
3. பொருளாதார பயன்கள்
4. சர்வாதிகார ஆளுமை
5. இன மையக் கொள்கை
6. கட்டுப்பாடான குழு அமைப்பு
7. முரண்பாடுகள்

**2. பாகுபாட்டிற்கான ஏதேனும் இரண்டு காரணிகளை எழுதுக.**

**விடை :**

**1) சாதி பாகுபாடு :**

★ சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டிற்கான மிக முக்கிய காரணம் சாதி முறை ஆகும்.

★ வேதகால ஆரிய சமுதாயத்தில் நிலவிய வர்ண அமைப்பிலிருந்து சாதி படிநிலை முறை உருவானது.

**2) பாலினப் பாகுபாடு :**

★ பாலினப் பாகுபாடு என்பது இந்தியாவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே நிலவும் உடல்நலம், கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் சமத்துவமின்மை போன்றவற்றைக் குறிக்கிறது.

★ எ.கா : ஒரு பெண் பள்ளிப் படிப்பை முடித்த பின் கல்லூரிக்கு செல்ல அனுமதி இல்லை.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செலக்சன்
## 6 சமூக அறிவியல்
## இரண்டாம் பருவம்

**வரலாறு**

### அலகு – 1. வட இந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும்

**பயிற்சிகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஆரியர்கள் முதலில் ............. பகுதியில் குடியமர்ந்தனர்.**

அ) பஞ்சாப் ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப்பகுதி
இ) காஷ்மீர் ஈ) வடகிழக்கு **விடை : அ) பஞ்சாப்**

**2. ஆரியர்கள் ................ லிருந்து வந்தனர்.**

அ) சீனா ஆ) வடக்கு ஆசியா
இ) மத்திய ஆசியா ஈ) ஐரோப்பா **விடை : இ) மத்திய ஆசியா**

**3. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்" ............ லிருந்து எடுக்கப்பட்டது.**

அ) பிராமணம் ஆ) ஆரண்யகம்
இ) வேதம் ஈ) உபநிடதம் **விடை : ஈ) உபநிடதம்**

**4. வேதகாலத்தில் எந்த விகிதத்தில் நிலவரி வசூலிக்கப்பட்டது ?**

அ) 1/3 ஆ) 1/6
இ) 1/8 ஈ) 1/9 **விடை : ஆ) 1/6**

---

**II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று :** வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கியச் சான்றுகள் மற்றும் பயன்பாட்டு பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

**காரணம் :** நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.

அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| 2. | பெண்கள் தனது கணவருடன் தமது வீட்டில் சடங்குகள் நடத்தினர். | பெண்கள் குடும்பத்தில் சடங்குகளை நடத்தமுடியாத நிலை உருவானது. |
| 3. | கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ளத் தடை இல்லை. | கைம்பெண்கள் மறுமணத் திற்கு ஊக்கம் அளிக்கப்பட வில்லை. |
| 4. | பெற்றோரிடமிருந்து சொத்துக் களைப் பெறும் சொத்துரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டது. | பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. |

**VIII. உயர்சிந்தனை வினா.**

**1. குருகுலக் கல்விமுறைக்கும் நவீன கல்விமுறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?**

**விடை :**

| வ.எண் | குருகுலக் கல்வி முறை | நவீன கல்வி முறை |
|---|---|---|
| 1. | மாணவர்கள் குருவுடன் தங்கியிருந்து, அவருக்குச் சேவை செய்து கல்வி கற்று அறிவை வளர்த்தனர். | மாணவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று ஆசிரியர் உதவியுடன் கல்வி கற்று அறிவை வளர்க்கின்றனர். |
| 2. | வாய்மொழி வாயிலாக மனப்பாடம் செய்து கற்றனர். | புத்தகங்கள் மூலம் பாடங்களை கற்கின்றனர். |
| 3. | நான்கு வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கணம், தர்க்கவியல், நெறிமுறைகள், ஜோதிடம், கணிதம், இராணுவ உத்திகள்கற்றுத்தரப்பட்டன. | மொழிசார்ந்த பாடங்கள், கணிதம், அறிவியல், சமூக அறிவியல், கணினி கற்றுத் தரப்படுகின்றன. |
| 4. | பெண்களுக்கு பொதுக் கல்வி அளிக்கப்படவில்லை. | அனைவருக்கும் தரமான ஒரேவிதமான கல்வி வழங்கப்படுகிறது. |
| 5. | ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கான பயிற்சி வழங்கப்பட்டது. | வேலை வாய்ப்பு மற்றும் ஆராய்ச்சியை முன்னிலைப் படுத்தி பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. |

**IX . பெருமிதமும் மகிழ்ச்சியும் – உண்மைகளை நாம் கண்டறிவோம்.**

**விடை :**

| தொல்பொருள் ஆய்விடங்கள் | தொல்லியல் கண்டுபிடிப்புகள் | உண்மைகள் |
|---|---|---|
| ஆதிச்சநல்லூர் | தமிழ்–பிராமி எழுத்துக்கள் | வரலாற்றுக்கு முந்திய பண்பாடு இருந்துள்ளது. |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. வெண் வரைபடம் மூலம் சமணத்துக்கும் பௌத்தத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளைச் சுட்டிக் காட்டுக.**

**விடை :**

**சமணம்**

(i) சமணம் தீவிரமான துறவறத்தைப் பின்பற்றியது

(ii) இந்தியாவில் மட்டுமே இருந்தது

(iii)கடவுள் இருப்பதாக சமணம் நம்பவில்லை. ஆனால் ஒவ்வொரு உயிரிலும் ஜீவன் இருப்பதை நம்பியது

**ஒற்றுமைகள்**

(i) மகாவீரர், புத்தர் இருவருமே அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருந்தபோதிலும் அவர்கள் அரச குடும்ப உரிமைகளை நிராகரித்து, துறவு வாழ்க்கையைத் தேர்வு செய்தனர்.

(ii) வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்தனர்.

(iii) மக்கள் பேசிய மொழிகளில் போதித்தனர்.

(iv) அனைத்து சாதியினரையும், பெண்களையும் சீடர்களாக ஏற்றுக் கொண்டனர்.

(v) இரத்த பலிகளை எதிர்த்தனர்.

(vi) "கர்மா"என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டனர்.

(vii) மதச் சடங்குகளை நடத்துவதன்மூலம் முக்தி அடையமுடியும் என்பதற்கு மாறாக சரியான நடத்தையும் சரியான அறிவுமே முக்திக்கான வழி எனக் கூறினர்.

**பௌத்தம்**

(i) பௌத்தம் இடைப்பட்ட வழியைப் பின்பற்றியது

(ii) உலகத்தின் பல பகுதிகளிலும் பரவியது

(iii)அனாத்மா (எல்லையற்ற ஆத்மா) அனித்யா (நிலையாமை) ஆகிய கருத்துக்களுக்கு அழுத்தம் வழங்கியது.

**6. குறுக்கெழுத்துப் புதிர் :**

**இடமிருந்து வலம் :**

1. மூன்று ரத்தினங்களுள் ஒன்று

**விடை : நற்செயல்**

2. புத்தரின் போதனைகள் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன

**விடை : தம்மா**

3. ஒரு சிறந்த கல்வி மையம்

**விடை : நாளந்தா**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ந | ற் | செ | ய | ல் | | 11 ஆ |
| | | | 2 த | ம் | மா | க |
| 8 நே | | 3 நா | ள | ந் | தா | ம |
| பா | 9 சை | 10 நி | | | | சி |
| ள | த் | ர் | | 4 க | யா | த் |
| ம் | தி | வா | மா | ர் | 7 க | தா |
| | ய | ணா | | யா | 6 மா | ந் |
| | ம் | 5 அ | கி | ம் | சை | தா |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அலகு – 3. குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை

### பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. நான்கு மகாஜனபதங்களில் மிகவும் வலிமையான அரசு எது ?**

அ) அங்கம் ஆ) மகதம்
இ) கோசலம் ஈ) வஜ்ஜி **விடை : ஆ) மகதம்**

**2. கீழ்க்கண்டவர்களில் கௌதம புத்தரின் சமகாலத்தைச் சேர்ந்தவர் யார் ?**

அ) அஜாதசத்ரு ஆ) பிந்துசாரர்
இ) பத்மநாப நந்தா ஈ) பிருகத்ரதா **விடை : அ) அஜாதசத்ரு**

**3. கீழ்க்காண்பனவற்றில் எது மௌரியர் காலத்திற்கான சான்றுகளாகும் ?**

அ) அர்த்த சாஸ்திரம் ஆ) இண்டிகா
இ) முத்ராராட்சஷம் ஈ) இவை அனைத்தும்
**விடை : ஈ) இவைஅனைத்தும்**

**4. சந்திரகுப்த மௌரியர் அரியணையைத் துறந்து ------------- என்னும் சமணத் துறவியோடு சரவணபெலகோலாவுக்குச் சென்றார்**

அ) பத்ரபாகு ஆ) ஸ்துலபாகு
இ) பார்ஸவநாதா ஈ) ரிஷபநாதா **விடை : அ) பத்ரபாகு**

**5. செல்யூகஸ் நிகேட்டரின் தூதுவர் ................**

அ) டாலமி ஆ) கௌடில்யர்
இ) செர்சக்ஸ் ஈ) மெகஸ்தனிஸ்
**விடை : ஈ) மெகஸ்தனிஸ்**

**6. மௌரிய வம்சத்தின் கடைசி அரசர் யார் ?**

அ) சந்திரகுப்த மௌரியர் ஆ) அசோகர்
இ) பிருகத்ரதா ஈ) பிந்துசாரர் **விடை : இ) பிருகத்ரதா**

---

**II. கூற்றைக் காரணத்துடன் பொருத்துக/ சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று :** அசோகர் இந்தியாவின் மாபெரும் பேரரசர் எனக் கருதப்படுகிறார்.

**காரணம் :** தர்மத்தின் கொள்கையின்படி அவர் ஆட்சிபுரிந்தார்.

அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்றும், காரணமும் உண்மையானவை. ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி.

**விடை : அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



XIII. வரைபடப்பணி


1. வரைபடத்தில் அசோகர் பேரரசின் எல்லைகளைக் குறிப்பிடவும்.

2. இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

அ) தட்சசீலம் ஆ) பாடலிபுத்திரம் இ) உஜ்ஜைனி

ஈ) சாஞ்சி உ) இந்திர பிரஸ்தம்

விடை :




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## புவியியல்

## அலகு – 1. வளங்கள்

### பயிற்சிகள்

**அ) பொருத்துக.**

| அ | ஆ |
|---|---|
| இயற்கை வளம் | கனிமங்கள் |
| பன்னாட்டு வளம் | நிலையான வளர்ச்சி |
| குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி | காற்று |
| புதுப்பிக்க இயலாதது | உற்பத்தி செய்தல் |
| உலகளாவிய வளம் | திமிங்கலப் புனுகு |
| இரண்டாம் நிலை செயல்பாடுகள் | காடு |

**விடை :**

| அ | ஆ |
|---|---|
| **இயற்கை வளம்** | **காடு** |
| **பன்னாட்டு வளம்** | **திமிங்கலப் புனுகு** |
| **குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி** | **நிலையான வளர்ச்சி** |
| **புதுப்பிக்க இயலாதது** | **கனிமங்கள்** |
| **உலகளாவிய வளம்** | **காற்று** |
| **இரண்டாம் நிலை செயல்பாடுகள்** | **உற்பத்தி செய்தல்** |

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கரும்பிலிருந்து ______________ தயாரிக்கப்படுகிறது.
**விடை : சர்க்கரை**

2. வளங்களை ______________ கையாளுதல் வளங்களின்பாதுகாப்பு எனப்படுகிறது. **விடை : கவனமாகக்**

3. குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் ______________ எனப்படுகிறது. **விடை : உள்ளூர் வளங்கள்**

4. தற்போது பயன்படுத்தப்படும் வளங்கள் ______________ வளங்கள் என்று அழைக்கப்படுகிறது. **விடை : கண்டுபிடிக்கப்பட்ட**

5. ______________ வளம் மிகவும் மதிப்புமிக்க வளமாகும்.
**விடை : மனித**

6. இயற்கை வளங்களைச் சேகரித்தல் ______________ எனப்படுகிறது.
**விடை : முதல்நிலைச் செயல்பாடு**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**விடை :**

| **இடமிருந்து வலம்** | **மேலிருந்து கீழ்** |
|---|---|
| 1. எங்கும் காணப்படும் வளங்கள் **விடை : உலகளாவிய வளம்** | 1. வளங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகளில் ஒன்று **விடை : மறுபயன்பாடு** |
| 2. காலத்தைச் சமநிலையில் வைக்கும் வளர்ச்சி **விடை : நிலையான வளர்ச்சி** | 2. இது ஒரு பன்னாட்டு வளம் **விடை : திமிங்கலப் புனுகு** |
| 3. சூரியனிடமிருந்து பெறப்படும் ஆற்றல் **விடை : சூரிய ஆற்றல்** | |
| 4. இயற்கையினால் அளிக்கப்படும் வளம் **விடை : இயற்கை வளம்** | |
| 5. ஒரு நாட்டிற்குச் சொந்தமான வளங்கள். **விடை : நாட்டு வளம்** | |
| 6. குறிப்பிட்ட இடங்களில் காணப்படும் வளம் **விடை : உள்ளூர் வளம்** | |

**ஓ) இந்தியப் புறவரி நிலவரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்.**

**1. நெய்வேலி 2. வங்காள விரிகுடா 3. அரபிக்கடல்**
**4. தமிழகக் காடுகள் 5. இந்தியப் பெருங்கடல்**
**6. சேலத்தில் உள்ள கஞ்சமலை இரும்புச் சுரங்கம்.**




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஓ) கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பொருளாதாரச் செயல்பாடுகள் தொடர்பான படங்களை உற்றுநோக்கி அட்டவணையை நிரப்புக.**

**விடை :**

| வ. எண் | படம் | முதல்நிலை/ இரண்டாம் நிலை/ மூன்றாம் நிலை | செயல்பாட்டின் பெயர் | காணப்படும் பகுதி |
|---|---|---|---|---|
| 1. |  | முதல்நிலை | சுரங்கத் தொழில் | நிலக்கரி கிடைக்கு மிடம் |
| 2. |  | இரண்டாம் நிலை | உற்பத்தி தொழிற் சாலை | மூலப் பொருள் கிடைக்கு மிடம் |
| 3. |  | மூன்றாம் நிலை | தொலை தொடர்பு சேவை | வங்கிகள், தபால் நிலையம். |
| 4. |  | முதல் நிலை | தோட்டக் கலை | விவசாய நிலப்பகுதி |

## கூடுதல் வினாக்கள்– விடைகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கடல் ஈஸ்ட்டானது நிலப்பரப்பிலுள்ள ஈஸ்ட்டைவிட மிகுந்த ............... உடையது. **விடை : ஆற்றல்**

2. ............... உலகின் பெரும் மருந்தகம் என அழைக்கப்படுகிறது. **விடை : வெப்பமண்டல மழைக்காடுகள்**

3. ஸ்பெர்ம் திமிங்கலத்தில் இருந்து பெறப்படும் ஒருவகைத் திடப்பொருளே ................. ஆகும். **விடை : திமிங்கலப் புனுகு**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## குடிமையியல்

## அலகு – 1. தேசியச் சின்னங்கள்

### பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. தேசியப்பாடலான வந்தே மாதரத்தை இயற்றியவர் ................**

அ) பிங்காலி வெங்கையா ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஈ) காந்திஜி

**விடை : இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி**

**2. இந்தியாவின் தேசியக் கீதம் ................**

அ) ஜன கண மன ஆ) வந்தே மாதரம்

இ) அமர் சோனார் பாங்கலே ஈ) நீராடுங் கடலுடுத்த

**விடை : அ) ஜன கண மன**

**3. ஆனந்த மடம் என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர் ................**

அ) அக்பர் ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஈ) ஜவஹர்லால் நேரு

**விடை : இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி**

**4. ................ பிறந்த நாளைச் சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்.**

அ) மகாத்மா காந்தி ஆ) சுபாஷ் சந்திர போஸ்

இ) சர்தார் வல்லபாய் பட்டேல் ஈ) ஜவஹர்லால் நேரு

**விடை : அ) மகாத்மா காந்தி**

**5. நம் தேசியக் கொடியில் உள்ள அசோகச்சக்கரத்தின் நிறம் ................**

அ) வெளிர் நீலம் ஆ) கருநீலம்

இ) நீலம் ஈ) பச்சை **விடை : ஆ) கருநீலம்**

**6. இந்திய விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக்கொடி ................ அருங்காட்சியகத்தில் உள்ளது.**

அ) சென்னை கோட்டை ஆ) டெல்லி

இ) சாரநாத் ஈ) கொல்கத்தா

**விடை : அ) சென்னை கோட்டை**

**7. தேசியக்கீதத்தை இயற்றியவர் ................**

அ) தேவேந்திரநாத் தாகூர் ஆ) பாரதியார்

இ) ரவீந்திரநாத் தாகூர் ஈ) பாலகங்காதர திலகர்

**விடை : இ) ரவீந்திரநாத் தாகூர்**

**8. தேசியக்கீதம் பாடுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய கால அளவு ................**

அ) 50 வினாடிகள் ஆ) 52 நிமிடங்கள்

இ) 52 வினாடிகள் ஈ) 20 வினாடிகள்

**விடை : இ) 52 வினாடிகள்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அலகு – 2. இந்திய அரசமைப்புச் சட்டம்

### பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. அரசமைப்புத் தினம் கொண்டாடப்படும் நாள் ............**

அ) ஜனவரி 26 ஆ) ஆகஸ்டு 15

இ) நவம்பர் 26 ஈ) டிசம்பர் 9 **விடை : இ) நவம்பர் 26**

**2. அரசமைப்புச் சட்டத்தை ............ ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொண்டது.**

அ) 1946 ஆ) 1950

இ) 1947 ஈ) 1949 **விடை : ஈ) 1949**

**3. அரசமைப்புச் சட்டத்தில் இதுவரை ................ சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.**

அ) 101 ஆ) 100

இ) 78 ஈ) 46 **விடை : அ) 101**

**4. இஃது அடிப்படை உரிமை அன்று...................**

அ) சுதந்திர உரிமை ஆ) சமத்துவ உரிமை

இ) ஓட்டுரிமை ஈ) கல்வி பெறும் உரிமை

**விடை : இ) ஓட்டுரிமை**

**5. இந்தியக் குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது .................**

அ) 14 ஆ) 18 இ) 16 ஈ) 21 **விடை : ஆ) 18**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அரசியல் நிர்ணய சபையின் தலைவராக ................ தேர்ந்தெடுக்கப்பட்டார். **விடை : முனைவர் இராஜேந்திர பிரசாத்**

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் ................. . **விடை : அண்ணல் அம்பேத்கர்**

3. நம் அடிப்படை உரிமைகளை உறுதி செய்யவும் பாதுகாக்கவும் செய்வது ................ ஆகும். **விடை : இந்திய அரசமைப்புச் சட்டம்**

4. நம் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் .................

**விடை : ஜனவரி – 26, 1950**

**III. பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

| | | | |
|---|---|---|---|
| 1) | சுதந்திர தினம் | – | அ) நவம்பர் 26 |
| 2) | குடியரசு தினம் | – | ஆ) ஏப்ரல் 1 |
| 3) | இந்திய அரசமைப்பு தினம் | – | இ) ஆகஸ்டு 15 |
| 4) | அனைவருக்கும் கல்வி உரிமை | – | ஈ) ஜனவரி 26 |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | இ | அ | ஈ | ஆ |
| ஆ) | இ | ஈ | அ | ஆ |
| இ) | ஈ | ஆ | அ | இ |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| விடை : ஆ) | இ | ஈ | அ | ஆ |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



VI, VII பிமாணவர் செயல்பாடு.

## கூடுதல் வினாக்கள்– விடைகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அரசமைப்புச் சட்ட வரைவுக்குழு முதல் கூட்டம் ............... ஆம் தேதி நடைபெற்றது. **விடை : 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 9**

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க ............... செலவிடப்பட்டது. **விடை : 64 லட்சம் ரூபாய்**

3. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ............... அடிப்படை உரிமைகள் உள்ளன. **விடை : ஆறு**

4. அரசியலில் போட்டியிட ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் ............... வயதைப் பூர்த்தியடைந்திருக்க வேண்டும். **விடை : 25**

5. நமது அரசியல் சட்டம் உருவானபோது ............... உறுப்புகள் இடம்பெற்றிருந்தன. **விடை : 395**

## பொருளியல்

## அலகு – 1. பொருளியல் – ஓர் அறிமுகம்

### பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தானியங்களை உற்பத்தி செய்பவர்கள் ...........
**விடை : விவசாயிகள்**

2. "தேன் சேகரித்தல்", என்பது .............. தொழில்.
**விடை : முதல்நிலை**

3. மூலப்பொருட்களைப் பயன்பாட்டுப் பொருட்களாக மாற்றுவது ........... எனப்படும். **விடை : இரண்டாம்நிலைத் தொழில்கள்**

4. காந்தியடிகளின் கூற்றுப்படி, கிராமங்கள் நம் நாட்டின் ..............
**விடை : முதுகெலும்பு**

5. தமிழ்நாட்டில் .............. சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.
**விடை : 47**

**II. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | கால்நடைகள் வளர்ப்பு | இரண்டாம்நிலைத் தொழில் |
| 2. | உணவு பதப்படுத்துதல் | சேவை |
| 3. | இரும்பு எஃகு தொழிற்சாலை | முதல்நிலைத் தொழில் |
| 4. | தொலைபேசி | வேளாண்சார் தொழிற்சாலை |
| 5. | பருத்தியாலை | மூன்றாம்நிலைத் தொழில் |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செலக்சன்

## 6 சமூக அறிவியல்

## மூன்றாம் பருவம்

### வரலாறு

### அலகு 1. பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும் : சங்ககாலம்

#### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தமிழகத்தில் பத்தினி வழிபாட்டை அறிமுகம் செய்தவர் ................**

அ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ) சேரன் செங்குட்டுவன்
இ) இளங்கோ அடிகள் ஈ) முடத்திருமாறன்

**விடை :ஆ) சேரன் செங்குட்டுவன்**

**2.கீழ்க்காணும் அரச வம்சங்களில் எது சங்க காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இல்லை**

அ) பாண்டியர் ஆ) சோழர்
இ) பல்லவர் ஈ) சேரர் **விடை : இ) பல்லவர்**

**3. பாண்டியர் ஆட்சிக்குப் பின் ஆட்சிக்கு வந்தோர் ..................... ஆவர்.**

அ) சாதவாகனர்கள் ஆ) சோழர்கள்
இ) களப்பிரர்கள் ஈ) பல்லவர்கள் **விடை : இ) களப்பிரர்கள்**

**4. சங்க கால நிர்வாக முறையில் மிகச் சிறிய நிர்வாக அமைப்பு........**

அ) மண்டலம் ஆ) நாடு
இ) ஊர் ஈ) பட்டினம் **விடை : இ) ஊர்**

**5. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் தொழில் யாது ?**

அ) கொள்ளையடித்தல் ஆ) ஆநிரை மேய்த்தல்
இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல் ஈ) வேளாண்மை

**விடை : இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல்**

---

**II. கூற்றை வாசிக்கவும், சரியான விடையை (✓) செய்யவும்.**

**1. கூற்று: புலவர்களின் குழுமம் சங்கம் என அறியப்பட்டது.**

**காரணம் : சங்க இலக்கியங்களின் மொழி தமிழாகும்.**

அ. கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

★ சீவக சிந்தாமணி, குண்டலகேசி ஆகிய இரண்டும் களப்பிரர் காலத்தில் எழுதப்பட்டவைகளாகும்.
★ தமிழகத்தில் பௌத்தமும், சமணமும் முக்கியத்துவம் பெற்றன.
★ சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய, மொழிகளின் அறிமுகத்தால் வட்டெழுத்து முறை உருவானது.
★ பதினெண் கீழ் கணக்கைச் சேர்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டன.
★ வணிகமும் வர்த்தகமும் தொடர்ந்து செழித்தோங்கின.
★ எனவே களப்பிரர் காலம் அல்ல.

---

## IX. வரைபடப் பயிற்சி

**1. தென்னிந்திய ஆறுகள் வரைபடத்தில் சேர, சோழ, பாண்டிய அரசுகளின் எல்லைகளைக் குறித்து, வர்ணம் தீட்டவும்.**
**விடை :**




---

www.Padasalai.Net www.CBSEtips.in



# அலகு 3. பேரரசுகளின் காலம் : குப்தர், வர்த்தனர்.

## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. குப்த வம்சத்தை நிறுவியவர் ............... ஆவார்.**

(அ) முதலாம் சந்திரகுப்தர் (ஆ) ஸ்ரீ குப்தர்
(இ) விஷ்ணுகோபர் (ஈ) விஷ்ணுகுப்தர்

**விடை : (ஆ) ஸ்ரீ குப்தர்**

**2. பிரியாகை மெய்கீர்த்தியை இயற்றியவர் ............ ஆவார்.**

(அ) காளிதாசர் (ஆ) அமரசிம்மர்
(இ) ஹரிசேனர் (ஈ) தன்வந்திரி

**விடை : (இ) ஹரிசேனர்**

**3. சந்திரகுப்தரால் நிறுவப்பட்ட ஒற்றை இரும்புத் தூண் ............ என்ற இடத்தில் உள்ளது.**

(அ) மெக்ராலி (ஆ) பிதாரி
(இ) கத்வா (ஈ) மதுரா **விடை : (அ) மெக்ராலி**

**4. அறுவை சிகிச்சை செயல்முறை குறித்து விளக்கிய முதல் இந்தியர் ......**

(அ) சரகர் (ஆ) சுஸ்ருதர்
(இ) தன்வந்திரி (ஈ) அக்னிவாசர் **விடை : (ஆ) சுஸ்ருதர்**

**5. வங்காளத்தின் கௌட அரசர் ............**

(அ) சசாங்கர் (ஆ) மைத்திரகர்
(இ) ராஜவர்த்தனர் (ஈ) இரண்டாம் புலிகேசி

**விடை : (அ) சசாங்கர்**

---

**II. கூற்றைக் காரணத்துடன் பொருத்திப் பார்த்து சரியான விடையை (✓) செய்யவும்**

**1. கூற்று :** வட இந்தியாவில் பல சிறிய நாடுகளைக் கைப்பற்றிய பின்னர், முதலாம் சந்திரகுப்தர் ஒரு பெரிய நாட்டின் முடியரசராகத் தனக்குத்தானே முடி சூட்டிக்கொண்டார்.

**காரணம் :** முதலாம் சந்திரகுப்தர் லிச்சாவி குடும்பத்தைச் சேர்ந்த குமாரதேவியை மணமுடித்தார்.

அ) காரணமும் கூற்றும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே (✓)

ஆ) காரணமும் கூற்றும் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி

**விடை : அ) காரணமும் கூற்றும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



✶ **ஆரியபட்டர், வராகமிகிரர், பிரம்மகுப்தா ஆகியோர் அக்காலப் பகுதியைச் சேர்ந்த மிக முக்கிய கணிதவியல், வானியல் அறிஞர்களாவர்.**

✶ **ஆரியபட்டர் தனது நூலான "சூரிய சித்தாந்தா" வில் சூரிய, சந்திர கிரணங்களுக்கான உண்மைக் காரணங்களைக் கூறியுள்ளார்.**

✶ **பூமி தனது அச்சில் சுழல்கிறது எனும் உண்மையை அறிவித்த முதல் இந்திய வானியல் ஆய்வாளர் அவரேயாவார்.**

## X. மாணவர் செயல்பாடு.

## XI. கட்டக வினா :

| | |
|---|---|
| தோரமானர் என்பவர் யார் ?<br>**விடை :**<br>✶ **ஹூணர்களின் தலைவர்** | குப்தப் பேரரசின் முக்கிய அரசு அதிகாரிகளின் பெயர்களை எழுதுக.<br>**விடை : ✶தண்டநாயகர்,**<br>**✶மகா தண்டநாயகர்** |
| அஸ்வமேத யாகம் நடத்திய குப்த அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக ?<br>**விடை : ✶சமுத்திர குப்தர்**<br>**✶முதலாம் குமார குப்தர்** | சந்திர, சூரிய கிரகணங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து விளக்கிய புத்தகத்தின் பெயர் என்ன ?<br>**விடை : சூரிய சித்தாந்தா** |
| நாணயங்களில் இடம் பெற்ற முதல் குப்த அரசரின் பெயர் என்ன ?<br>**விடை : ஸ்ரீ குப்தர்** | சமுத்திரகுப்தரின் ஆட்சி குறித்து அறிந்துகொள்ள உதவும் மிக முக்கியமான சான்று எது ?<br>**விடை : அலகாபாத் கல் தூண்** |
| தொடக்கத்தில் ஹர்ஷர் ............. வழிபட்டார்.<br>**விடை : சிவபெருமான்** | ஹர்ஷரின் காலத்தில் .............. பல்கலைக்கழகம் அதனுடைய புகழின் உச்சத்தை எட்டியது.<br>**விடை : நாளந்தா** |

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

### I. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஸ்ரீகுப்தரின் மகன் ................ **விடை : கடோத்கஜர்**
2. முதலாம் சந்திரகுப்தர் வலிமை மிகுந்த ................ அரச குடும்பத்தைச் சேர்ந்த .................... மணந்தார் **விடை : லிச்சாவி, குமாரதேவி**
3. விக்கிரமாதித்யரின் அவையிலிருந்த புகழ்பெற்ற மருத்துவர்................ **விடை : தன்வந்திரி**
4. பாலாதித்யர் ................ என்ற பெயரில் அரியணை ஏறினார் **விடை : முதலாம் நரசிம்மகுப்தர்**
5. ........... எழுதப்பட்ட..............எனும் நூல் அரசு கருவூலத்தின் முக்கியத் துவத்தைக் குறிப்பிடுகின்றது **விடை : காமாந்தகர், நிதிசாரம்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. "சந்திர வியாகரணம்" என்ற நூலை எழுதியவர்................

**விடை : சந்திரரோகோமியா**

7. ஹர்ஷர் சீனப்பயணி யுவான்சுவாங்கை முதன்முதலாக ................ என்ற இடத்தில் சந்தித்தார் **விடை : கஜன்கலா**

8. "புனித யாத்ரீகர்களின் இளவரசன்" ............ **விடை : யுவான் சுவாங்**

9. குப்தப் பேரரசு ................ அல்லது................ எனும் பெயரில் பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டன. **விடை : தேசம், புக்தி**

10. ............., ..........., ......... என்ற பட்டப்பெயர்களால் அழைக்கப்பட்ட குப்த மன்னர். **விடை : தேவகுப்தர், தேவஸ்ரீ, இரண்டாம் சந்திரகுப்தர்**

---

## அலகு 4. தென்னிந்திய அரசுகள்

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. கீழ்க்காண்பவர்களில் வைகுண்டப்பெருமாள் கோவிலைக் கட்டியது யார் ?**

(அ) இரண்டாம் நரசிம்மவர்மன் (ஆ) இரண்டாம் நந்திவர்மன்
(இ) தந்திவர்மன் (ஈ) பரமேஸ்வரவர்மன்

**விடை : (ஆ) இரண்டாம் நந்திவர்மன்**

**2. கீழ்க்காண்பனவற்றுள் முதலாம் மகேந்திரவர்மன் சூட்டிக்கொண்ட பட்டங்கள் யாவை ?**

(அ) மத்தவிலாசன் (ஆ) விசித்திரசித்தன்
(இ) குணபாரன் (ஈ) இவை மூன்றும்

**விடை : (ஈ) இவை மூன்றும்**

**3. கீழ்க்காண்பனவற்றில் இரண்டாம் புலிகேசியின் வெற்றிகளை விவரிக்கும் கல்வெட்டு எது ?**

(அ) அய்கோல் (ஆ) சாரநாத்
(இ) சாஞ்சி (ஈ) ஜீனாகத் **விடை : (அ) அய்கோல்**

---

**II. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்துப் பொருத்தமான விடையை டிக் (✓) செய்யவும்**

**1. கூற்று (i)** : பாறை குடைவரை கோவிலைச் செதுக்கும் முறையிலிருந்து, கற்களைக் கொண்டு கட்டுமானக் கோவில்களைக் கட்டும் மாற்றம் ஏற்பட்டதை பல்லவர் கலை உணர்த்துகிறது.

**கூற்று (ii)** : காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோவில் பல்லவர்களின் கலை மற்றும் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அ) கூற்று (i) தவறு ஆ) கூற்று (ii) தவறு
இ) இரு கூற்றுகளும் சரி (✓) ஈ) இரு கூற்றுகளும் தவறு

**விடை : இ) இரு கூற்றுகளும் சரி**

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## XI. கட்டக வினா :

| | | |
|---|---|---|
| பல்லவர் காலத்துக் கட்டுமானக் கோவில் களுக்கு ஒரு எடுத்துக் காட்டு தருக. **விடை :காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோவில்** | சாளுக்கியர் காலத்தில் வளர்ச்சி பெற்ற புதிய கட்டடக்கலைப் பாணி யின் பெயரென்ன ? **விடை :வெசாரா** | அய்கோல் கல்வெட்டு கூறுவதென்ன ? **விடை : ஹர்ஷவர்த்தனர் இரண்டாம் புலிகேசி யால் தோற்கடிக்கப் பட்டதை குறிப்பிடுகின்றது** |
| எல்லோராவில் உள்ள கைலாசநாதர் கோவிலைக் கட்டியது யார் ? **விடை :முதலாம் கிருஷ்ணர்** | மாமல்லனின் கட்டடக் கலைப் பாணியில் அமைந்துள்ள சிற்ப மண்டபத்தின் பெயரென்ன ? **விடை : திறந்தவெளிக் கலையரங்கம்** | சாளுக்கியரின் கட்டுமானக் கோவில்கள் எங்குள்ளன ? **விடை : ✶அய்கோல், ✶வாதாபி, ✶பட்டடக்கல்.** |
| பல்லவர் காலத்தில் பக்தி மார்க்கத்தைப் போதித்த இரு சைவ, வைணவத் துறவியரின் பெயர்களைக் குறிப்பிடுக **விடை : சைவ துறவியர்: 1. அப்பர், 2.மாணிக்கவாசகர், வைணவத்துறவியர் : 1.நம்மாழ்வார், 2.ஆண்டாள்** | ராஷ்டிரகூட வம்சத்தை நிறுவியவர் யார் ? **விடை : தந்திதுர்க்கர்** | முதலாம் நரசிம்மவர்மன் சூட்டிக்கொண்ட பட்டங்கள் யாவை ? **விடை : ✶மாமல்லன் ✶வாதாபி கொண்டான்** |

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

### I. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தளபதி ................ அவரின் வேறுபெயர் .............. **விடை : பரஞ்சோதி, சிறுத்தொண்டர்**
2. சிம்மவிஷ்ணு சூட்டிக்கொண்ட பட்டம் ........... **விடை : அவனிசிம்மர்**
3. கைலாசநாதர் கோவிலின் வேறுபெயர் ................ **விடை : இராஜசிம்மேஸ்வரம்**
4. ................ மகாபாரதத்தை பாரதவெண்பா எனும் பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார். **விடை : பெருந்தேவனார்**
5. .........முதல் கீழைச்சாளுக்கிய அரசரானார் **விடை : விஷ்ணுவர்த்தனர்**
6. அமோகவர்ஷர்................ எனும் சமணத் துறவியால் சமண மதத்திற்கு மாற்றப்பட்டார். **விடை : ஜினசேனா**
7. விருப்பாக்ஷா கோவில் ................ கோவிலை மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டது **விடை : காஞ்சி கைலாசநாதர் கோவில்**
8. வாத்ஸ்யாயர் எழுதிய நூல் ................ **விடை : நியாய பாஷ்யா**
9. இஸ்லாமியப் பேரரசின் மகத்தான நகரம் .............. **விடை : பாக்தாத்**
10. சமஸ்கிருத அறிஞரான பாரவி ................ என்னும் வடமொழிக்காப்பியத்தை வடித்தார். **விடை : கிரதார்ஜீனியம்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## புவியியல்

## அலகு 1. ஆசியா மற்றும் ஐரோப்பா

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆசியாவின் மேற்கு எல்லையில் இல்லாதது எது ?**

(அ) கருங்கடல் (ஆ) மத்திய தரைக்கடல்
(இ) செங்கடல் (ஈ) அரபிக்கடல்

**விடை : (ஈ) அரபிக்கடல்**

**2. எல்பர்ஸ் மற்றும் ஜாக்ரோஸ் இடையில் அமைந்துள்ள மலையிடைப் பீடபூமி ?**

(அ) திபெத் (ஆ) ஈரான்
(இ) தக்காணம் (ஈ) யுனான் **விடை : (ஆ) ஈரான்**

**3. நிலநடுக்கோட்டுக் காலநிலை என்பது**

(i) ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும்.
(ii) சராசரி மழையளவு 200 மி.மீ ஆகும்.
(iii) சராசரி வெப்பலை 10°C ஆகும்.

**மேற்கண்ட கூற்றுகளில்**

(அ) (i) மட்டும் சரி (ஆ) (ii) மற்றும் (iii) சரி
(இ) (i) மற்றும் (iii) சரி (ஈ) (i) மற்றும் (ii) சரி

**விடை : (அ) (i) மட்டும் சரி**

**4. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. மலேசியா | 1. அத்தி |
| B. தாய்லாந்து | 2. ரப்பர் |
| C. கொரியா | 3. தேக்கு |
| D. இஸ்ரேல் | 4. செர்ரி |

**குறியீடுகள்**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 4 | 1 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 2 | 3 | 1 | 4 |

**விடை : அ)**

| A | B | C | D |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | 1 |

**5. இந்தியா ................... உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது.**

(அ) துத்தநாகம் (ஆ) மைக்கா
(இ) மாங்கனீசு (ஈ) நிலக்கரி **விடை : (ஆ) மைக்கா**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




**IX. வரைபடப் பயிற்சி :**

**ஆசியா மற்றும் ஐரோப்பா வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

**ஆசியா : யூரல்மலை, இமயமலை, பாமீர், கோபி பாலைவனம், அரேபியன் தீபகற்பம், தக்காண பீடபூமி, யாங்சி ஆறு, ஓப் ஆறு, ஏரல் கடல் மற்றும் பைகால் ஏரி.**

**விடை :**




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




**2. அட்ச, தீர்க்கக் கோடுகளின் அடிப்படையில் புவி எவ்வாறு அரைக்கோளங்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்பதைப் படத்துடன் விவரி.**

**விடை :**

**அரைக் கோளங்கள் :** அட்ச, தீர்க்கக் கோடுகளின் அடிப்படையில் புவி நான்கு அரைக் கோளங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**1. வட அரைக்கோளம் :**

✶ 0° நிலநடுக்கோட்டிலிருந்து 90° வட துருவம் வரையுள்ள புவிஈர்ப்பு பகுதி வட அரைக்கோளம் எனப்படும்.



வட அரைக்கோளம்

**2. தென் அரைக்கோளம் :**


✶ 0° நிலநடுக்கோட்டிலிருந்து 90° தென் துருவம் வரையுள்ள புவிஈர்ப்பு பகுதி தென் அரைக்கோளம் எனப்படும்.



தென் அரைக்கோளம்

**3. கிழக்கு அரைக்கோளம் :**

✶ 0° தீர்க்கக்கோட்டிலிருந்து 180° கிழக்கு தீர்க்கக்கோடு வரை காணப்படும் புவிஈர்ப்பு பகுதி கிழக்கு அரைக்கோளம் எனப்படும்.



கிழக்கு அரைக்கோளம்

**4. மேற்கு அரைக்கோளம் :**

✶ 0° தீர்க்கக்கோட்டிலிருந்து 180° மேற்கு தீர்க்கக்கோடு வரை காணப்படும் புவிஈர்ப்பு பகுதி மேற்கு அரைக்கோளம் எனப்படும்.




மேற்கு அரைக்கோளம்

**3. முக்கிய அட்சக்கோடுகள் யாவை? அவற்றின் இடையே காணப்படும் மண்டலங்கள் பற்றி விளக்குக ?**

**விடை : அ) முக்கிய அட்சக்கோடுகள் :**

1. நிலநடுக்கோடு 0°
2. கடகரேகை 23 1/2° வ
3. மகர ரேகை 23 1/2° தெ
4. ஆர்க்டிக் வட்டம் 66 1/2° வ
5. அண்டார்டிக் வட்டம் 66 1/2° தெ
6. வட துருவம் 90° வ
7. தென் துருவம் 90° தெ



www.Padasalai.Net www.CBSEtips.in



# குடிமையியல்

## அலகு 1. மக்களாட்சி

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆதிமனிதன் ................. பகுதியில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கினான்.**

(அ) சமவெளிகள் (ஆ) ஆற்றோரம்
(இ) மலைகள் (ஈ) குன்றுகள் **விடை :(ஆ) ஆற்றோரம்**

**2. மக்களாட்சியின் பிறப்பிடம் .................**

(அ) சீனா (ஆ) அமெரிக்கா
(இ) கிரேக்கம் (ஈ) ரோம் **விடை : (இ) கிரேக்கம்**

**3. உலக மக்களாட்சி தினம் ................. ஆகும்.**

(அ) செப்டம்பர் 15 (ஆ) அக்டோபர் 15
(இ) நவம்பர் 15 (ஈ) டிசம்பர் 15

**விடை : (அ) செப்டம்பர் 15**

**4. நேரடி மக்களாட்சியில் வாக்களிப்பவர் .................**

(அ) ஆண்கள் (ஆ) பெண்கள்
(இ) பிரதிநிதிகள் (ஈ) வாக்காளர்கள்

**விடை : (ஈ) வாக்காளர்கள்**

---

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நேரடி மக்களாட்சியைச் செயல்படுத்தும் நாடு ................

**விடை : சுவிட்சர்லாந்து**

2. மக்களாட்சிக்கான வரையறையை வகுத்தவர் ................

**விடை : ஆப்ரகாம் லிங்கன்**

3. மக்கள் ................ அளிப்பதன் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். **விடை : வாக்கு (ஓட்டு)**

4. நம் நாட்டில் ................ மக்களாட்சி செயல்படுகிறது.

**விடை : பிரதிநிதித்துவ**

---

**III. விடையளிக்கவும்.**

**1. மக்களாட்சி என்றால் என்ன ?**

**விடை :** ஒரு நாட்டின்குடிமக்கள் தேர்தல் வழியில் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், அதன் மூலம் அரசு அதிகாரத்தில் நேரடியாகப் பங்கேற்பதையுந்தான் மக்களாட்சி என்கிறோம்.

---

**2. மக்களாட்சியின் வகைகள் யாவை ?**

**விடை :** 1. நேரடி மக்களாட்சி 2. பிரதிநிதித்துவ மக்களாட்சி

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. ஆப்ரகாம் லிங்கன் ............... நாட்டின் ஜனாதிபதியாவார்.

**விடை : அமெரிக்கா**

3. ............... அரசமைப்புச் சட்டம்தான் உலகில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களிலேயே மிகப் பெரியது.

**விடை : இந்தியா**

4. நமது "அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராக .............. கருதப்படுகிறார் "

**விடை : டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்**

5. முன்னுரிமை பெற்ற சிலரால் நடத்தப்படும் ஆட்சி முறை..............

**விடை : மக்களாட்சி**

6. உலகிலேயே முதன்முதலில் பெண்களுக்கு ஒட்டுரிமை அளித்த நாடு ................ **விடை : நியூஸிலாந்து**

## அலகு 2. உள்ளாட்சி அமைப்பு– ஊரகமும் நகர்ப்புறமும்

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ................ அமைக்கப்படுகிறது.**

(அ) ஊராட்சி ஒன்றியம் (ஆ) மாவட்ட ஊராட்சி
(இ) வட்டம் (ஈ) வருவாய் கிராமம்

**விடை : (அ) ஊராட்சி ஒன்றியம்**

**2. தேசிய ஊராட்சி தினம் ................ ஆகும்.**

(அ) ஜனவரி 24 (ஆ) ஜூலை 24
(இ) நவம்பர் 24 (ஈ) ஏப்ரல் 24 **விடை : (ஈ) ஏப்ரல் 24**

**3. இந்தியாவின் பழமையான உள்ளாட்சி அமைப்பாக அமைக்கப்பட்ட நகரம் ..................**

(அ) டெல்லி (ஆ) சென்னை
(இ) கொல்கொத்தா (ஈ) மும்பை **விடை : (ஆ) சென்னை**

**4. மாநகராட்சியின் தலைவர் ................. என அழைக்கப்படுகிறார்.**

(அ) மேயர் (ஆ) கமிஷனர்
(இ) பெருந்தலைவர் (ஈ) தலைவர் **விடை : (அ) மேயர்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்தியாவிலேயே பேரூராட்சி என்ற அமைப்பை அறிமுகப்படுத்திய மாநிலம் ............... ஆகும். **விடை : தமிழ்நாடு**

2. பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு ...............

**விடை : 1992**

3. உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் ............... ஆண்டுகள்.

**விடை : ஐந்து**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. சாலை பாதுகாப்பு குறித்த சுவரொட்டிகள் தயாரிக்கவும்.**

**விடை :**















**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பாதசாரிகளுக்கு என்று சாலையில் கடக்கும் பகுதி .......... ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. **விடை : 1934, பிரிட்டன்**
2. ............... பின்தான் ஜிப்ரா கிராசிங் உருவாக்கப்பட்டன. **விடை : இரண்டாம் உலகப்போர்**
3. ............... சாலைகளில் செய்ய வேண்டிய மற்றும் செய்யக்கூடாதவைகள் பற்றிய விதிகளாகும். **விடை : கட்டாயக் குறியீடுகள்**
4. ............... திசைகள் மற்றும் சேரவேண்டிய இடங்கள் குறித்த தகவல்களைக் கூறுவது. **விடை : அறிவுறுத்தும் குறியீடுகள்**
5. சாலையின் .......... ஓரத்தில் செல்லவேண்டும். **விடை : இடப்பக்கம்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# செலக்சன்

## எங்கள் வெளியீடுகள்

3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்

சமூக அறிவியல்

3 முதல் 6 வகுப்பு வரை 5 in 1

தமிழ் வழி & ஆங்கில வழி

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி

மதுரை - 625001

94430 43338

94430 46662

www.Padasalai.Net